16th March 1959]

SRI V. K. KOTHANDARAMAN: திறந்த வெளி சிறைச் சாலேகளைச் சர்வாதிகார ஆட்சியில் ஏற்படுத்தி வருவதாகத்தான் நாம் அறிகிறோம். ஆகவே இந்தக் கேள்வி கேட்ட அங்கத்தினர் அவர்கள்.

MR. SPEAKER: இது பதிலில் சொல்லவில்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லை. அது அவர்களுடைய சொந்த அபிப்பிராயமாக இருக்கலாம். சர்வாதிகார நாட்டினுடைய ஏகபோக உரிமை என்றோ ஜனநாயக ஆட்சியில் ரொம்பப் பொருத்தம் என்றோ நான் சொல்லவில்லை.

SRI A. A. RASHEED: May I know how this open-air jail is running in Coimbatore?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There, only a small number of prisoners have been asked to cultivate some land which is available and they have been carrying on.

—

Admissions to Colleges

* 820 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken by the Government to provide more seats in Professional and Arts Colleges in the State for the year 1959?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Government do not propose to take any steps to increase the number of seats in Professional and Arts Colleges in the State for the year 1959.

SRI N. K. PALANISAMI: வருஷா வருஷம் இந்த "ப்ரொபஷனல்" காலேஜ், எஞ்சினியரிங் காலேஜ், மெடிகல் காலேஜ் ஆகியவைகளில் அநேக மாணவர்கள் இடம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுவதன் காரணமாக, அதிகப்படியான மாணவர்களைச் சேர்க்க வேறு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது எஞ்சினீயரிங் காலேஜைப் பொறுத்தவரை போதுமான அளவு வசதிகளைப் பெருக்கி இருக்கிறோம். உதாரணமாக காலேஜ் ஆப் எஞ்சினீயரிங், கிண்டியில் 155 பேரை அதிகமாக எடுக்க போதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கவர்ண்மெண்ட் காலேஜில் 45 அதிகம். ஏ. சி. காலேஜ், காரைக்குடியில் 20 அதிகம். பி. எஸ். ஜி. காலேஜில் 20 அதிகம். கோயம்புத்தூர் காலேஜில் 120 அதிகம். புதிய காலேஜ்கள் உருவாக இருக்கின்றன. தியாகராஜா காலேஜ், மதுரையில் 120 அதிகம்.

SRI S. LAZAR: ப்ரொபஷனல் காலேஜ்களைப் பொறுத்தவரை இப்பொழுது தேவைப்படுகின்ற அளவுக்கு அங்கிருந்த பயிற்சி பெற்ற மாணவர்கள் வெளி வருகின்றனரா ? இல்லையென்றால் எவ்வளவு குறைவு அல்லது அதிகம்?

THE HON. SRI C. SUBRAMANIAM: காலேஜைப் பொறுத்தவரை இப்போதைய தேவைக்குப் போதும் என்பது என் கருத்து. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகும்போது எத்தனை எஞ்சினீயர்கள் வேண்டுமென்பது பற்றி இப்பொழுதிலிருந்தே திட்டமிட்டு, இன்னும் எத்தனை பேர் அதிகமாக வேண்டுமென்பதைப் பற்றி முடிவு செய்து, அதற்கான நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் இருந்து எடுக்கப்படும்.

[16th March 1959

SRI N. K. PALANISAMI : இந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்க ஏற்படுத்தப்பட்டிருக்கும் கமிட்டிகள் ஒவ்வொரு காலேஜிலும் ஏற்படுத்துவதாகத் திட்டம் இருக்கிறதா ?

MR. SPEAKER : இந்தக் கேள்வியில் இருந்து இது எழவில்லையே.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரே ஒரு கமிட்டி தான் வேலை செய்து வருகிறது.

SRI V. SUBBIAH : சார், இந்த நாட்டிலே விவசாய உற்பத்தி பெருக வேண்டுமென்று சொல்லக்கூடிய நேரத்திலே விவசாயப்பட்டதாரிகள் குறைவாக இருக்கிறார்கள். விவசாயக் கல்லூரிகளில் அந்தப் பட்டதாரிகள் எத்தனை பேர் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் புள்ளி விவரங்கள் என்னிடம் இல்லை. அதிலும் அதிகப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள்.

Appointment of women as Block Development Officers

* 821 *Q.*—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

இதுவரை பெண்களை B.D.O.-வாக எடுத்திருக்கிறார்களா ? இல்லாவிடில் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No Sir. If and when suitable women candidates are available their cases will no doubt be considered.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : சமுதாய நலத் திட்டம் 3 லட்சம் முதல் 5 லட்சம் வரை பெண்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. திட்டவேலைகள் வெற்றிகரமாக நடந்து வருகின்றன. சமுதாய நல பி.டி.ஓ.க்கள் பதவி பெண்களுக்கும் கொடுக்கப்படுமானால் அவர்கள் அந்தப் பதவியை ஏற்று திட்டமாக நல்ல முறையில் சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றுவார்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கும் அந்தப் பதவியைக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்களை அமர்த்தினால் திறமையாகச் செய்வார்கள். அதற்குத் தக்க பெண்கள் முன்வர வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : "Women Welfare Officer"கள் ஆக தகுதியுள்ள பெண்கள் நியமிக்கப்பட்டிருக்கிற நேரத்தில் வேலூரில் சமீபத்தில் நடந்த 3 ஜில்லாக்களைக் கொண்ட சமுதாய நலக்கூட்டத்திலே பெண்கள் பி.டி.ஓ.க்களாக நியமிக்கப்படவேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி உடனடியாகப் பரிசீலனை செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தீர்மானம் போடுவது வேறு. அதற்குத் தகுதியுள்ள பெண்கள் வரும்போது அவர்களை எடுத்துக்கொள்ள முடியும். தகுதியுள்ள பெண்கள் வரும்போது இதைப் பற்றிக் கவனிக்கப்படும்.

SRI A. A. RASHEED : What are the qualifications prescribed for the post of Block Development Officers?

THE HON. SRI C. SUBRAMANIAM : A separate question may be put.